72, Park Street, Colombo 2, Sri Lanka
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி: 15 December 2023

நேரம்: 12:00 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

டல்ரீன் பாத்லாட்

மின்னஞ்சல்: dalreen `at' ihp.lk

**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய

மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# சஜித் பிரேமதாசவின் சாதகதகத்தன்மை மதிப்பீடு நவம்பர் மாதத்தில் முன்னேறியுள்ளது ஆயினும் தொடர்ந்து அ கு திஸாநாயக்கவினுடையதைக் காட்டிலும் பின்தங்கி இருந்தது

*அனைத்து கட்சித்தலைவர்களுக்கும் மறைகணிய சாதகத்தன்மை மதிப்பீடுகள் தொடர்ந்தன*

அக்டோபர் மாத IHP SLOTS கருத்துக்கணிப்பின்படி எல்லா முக்கிய கட்சி தலைவர்களுக்கும் எதிர்மறையான சாதகத்தன்மை மதிப்பெண்கள் தொடர்ந்தன. எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாசவின் சாதகத்தன்மை -64 விலிருந்து -46 ற்கு உயர்ந்தது எனினும் -14ல் இருந்த என்.பி. பி./ஜே.வி.பி. தலைவர் அ. கு. திஸாநாயகவின் சாதகத்தன்மையோடு ஒப்பிடுகையில் மோசமான நிலை தொடர்ந்தது.




குறைந்தபட்ச பதில்களை உறுதிபடுத்திக்கொள்ளுவதற்காக ஒவ்வொரு மாதத்திற்கான சாதகத்தன்மை மதிப்பீடுகளும் அந்த மாதத்தில் நடத்தப்பட்ட மற்றும் அதற்கு சில வாரங்களுக்கு முன்னும் பின்னும் நடத்தப்பட்ட 100-500 நேர்காணல்களின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன. நவம்பர் 2023க்கான மதிப்பீடுகள் 427 (சஜித் பிரேமதாச), 394 (அ. கு. திஸாநாயக்க), 419 (ரணில் விக்கிரமசிங்க) and 172 (கோட்டாபய ராஜபக்ச) நேர்காணல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்டன.

## ஆசிரியர்களுக்கு குறிப்பு

ஊடக அறிக்கைகளில் இந்த எண்கள் வெளிவரும்போது பொதுமக்களில் சிலர் இவற்றை தவறாக புரிந்துகொள்வதை நாங்கள் கவனித்துள்ளோம். மறைகணி மதிப்பெண்கள் அதாவது பூஜியத்தைவிட குறைவான நிகர சாதகத்தன்மை மதிப்பீடு, தனி நபர் அல்லது நிறுவனம் பிரபலமற்றவர்/பிரபலமற்றது என்று அர்த்தமாகும். நிறைகணி மதிப்பெண்கள் அதாவது பூஜியத்தைவிட அதிகமான நிகர சாதகத்தன்மை மதிப்பீடு, சராசரியாக தனி நபர் அல்லது நிறுவனம் பிரபலமானவர்/பிரபலமானது என்று அர்த்தமாகும்.

## தொடர்புடைய அறிக்கைகள்

Institute for Health Policy, November 2023, "AK Dissanayake continues to see his favourability improve, while it worsens for other party leaders." Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231117.pdf*

Institute for Health Policy, October 2023, "Favourability ratings of AK Dissanayake least negative of major party leaders in September." Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231020.pdf*

Institute for Health Policy, September 2023, “AK Dissanayake’s public favourability improves, but Sajith Premadasa’s worsens in August.” Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230920.pdf*

Institute for Health Policy, August 2023, “Favourability of NPP/JVP leader AK Dissanayake sees significant drop in July 2023.” Available at: *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230816.pdf*

Institute for Health Policy, July 2023, “Favourability ratings of all major party leaders declined in June 2023.” *Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230720.pdf*

Institute for Health Policy, May 2023, “AK Dissanayake the only major party leader with a positive net favourability rating in April 2023.” *Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230518.pdf*

Institute for Health Policy, March 2023, “Sri Lankans continue to hold unfavourable views of all political party leaders. Most more unpopular than French President Macron, with only a few having a small positive rating.” *Available at:* *https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230328.pdf*

Institute for Health Policy, February 2023, “President Ranil Wickremesinghe remained less unpopular than his predecessor as 2022 ended, but the public unhappy with all party leaders.” *Available at:* *https://www.ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230208.pdf*

Institute for Health Policy, April 2022, “SLOTS Favourability Ratings: Methodology for tracking public favourability”, SLOTS Report #2022-03. *Available at:* *https://ihp.lk/publications/docs/SLOTSReport202203.pdf*

## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

## முறை

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு

முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் மற்றவர்களையும் SLOTS ஆய்வு செய்கின்றது. பதிலளிப்பவர்களிடம் ஒரு பொது நபர் அல்லது நிறுவனம் பற்றி அவர்களுக்கு சாதகமான அபிப்பிராயம் உள்ளதா அல்லது சாதகமற்ற அபிப்பிராயம் உள்ளதா என்று கேட்பதன்மூலம் SLOTS சாதகத்தன்மையை கணக்கிடுகின்றது: நேர்மறை(+100) மற்றும் எதிர்மறையான(-100) பதில்களின் சராசரியே நிகர சாதகத்தன்மையாகும். தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, துறை, மாகாணம் மற்றும் முந்தைய வாக்காளர் தீர்மாணத்தோடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் எடையிடப்பட்டன. நவம்பர் புதுபிப்பு முந்தைய மாதங்களின் புதுப்பிப்பைவிட சமீபத்திய தரவுகளை பயன்படுத்துவதால் முந்தைய மாதங்களின் சாதகத்தன்மை மதிப்பீடுகளில் சிறிய மாற்றங்கள் உள்ளன.

## நிதியுதவி

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.